5- பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

86. சென்னையிலுள்ள செக்கஸ்லோவோகியா சோசலிசக் குடியரசின் வர்த்தகப் பிரதிநிதியினருக்குச் சொந்தமான TMQ: 998 ஆம் எண் வண்டிக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு 28—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 1765 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. சிமெண்டு விற்பனையின் மீது செலுத்த வேண்டிய வரி வீதத்தைக் குறைப்பது குறித்து 28—9—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1097 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

88. ரொட்டிக் கடைப் பொருட்களின் மீது விற்பனை வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து 11—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 1019ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

89. சென்னையிலுள்ள, மெட்ராஸ் பெட்ரோலியம் நிறுவனத்திற்கு விநியோக இருப்பிலுள்ள மின்மாற்றி எண்ணெயினை விற்பனை செய்வதன் மீதான விற்பனை வரியினை 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைப்பது குறித்து 14—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1022 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

90. சென்னை-12-ல் உள்ள தயாசண்டன் விற்பனை செய்யக் கூடிய பழைய இரும்பு பெட்டகம், காலிச் சாக்குகள் மற்றும் உடைந்த பாத்திரங்களை விற்பனை செய்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 28—9—1981-ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்

1982 பிப்ரவரி 4]

சமய அறக்கட்டளைகள் துறையின் 1099 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

91. ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாளர்கள் என்பீல்டு இந்தியா நிறுவனத்தின் அனைக்கரைப்பட்டி தொழிற் பிரிவு உற்பத்தி செய்யும் முழுதும் செய்து முடிக்கப்பட்ட பொருட்களின் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியில் இருந்து விலக்களிப்பது குறித்து 27—5—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 534 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

92. தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் ஒன்றிற்கொன்று பேருந்துகளை மாற்றிக் கொள்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 6—10—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அற கட்டளைகள் துறையின் 1133 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

*93. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8 1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

* 94. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளர் தணிக்கை செய்துள்ளவாறு (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

* 95. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம் [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

---

* 2—2—1982 அன்று அவைமுன் வைக்கப்பெற்றன.

96. கசப்புக்காய் மற்றும் தக்காளி ஆகியவற்றை வேளாண் விளை பொருள்களாக அறிவிப்பது குறித்து 31—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 628 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

$ 12. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

@13. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 26—8—1981 முதல் 1—9—1981 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

14. 1971—72 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழு (1977—78) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 12-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

15. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1960—61 ஆம் ஆண்டு முதல் 1965—66 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1974—75) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 13-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

16. 1973—74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத்துறைகள் பற்றிய அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977-79) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் 14-வது அறிக்கை (ஆங்கிலம், தமிழ்).

17. இந்து ஆங்கில நாளேடுக்கு ''சட்டமன்ற செயலகம்'' என்ற தலைப்பில் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் எழுதி' கடிதம் குறித்து அவர் மீதும் அதனைப் பிரசுரித்ததற்காக, ''இந்து'' நாளேடு மீதும் எழுப்பப்பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை.

$ 1—2—1982 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப் பெற்றது.

@ 30—1—1982 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.